**நோவூட் பிரதேச சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நோவூட் பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோவூட் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி 161 இன் பிரகாரம் பிரதேச சபை 17 படிவத்தின் பிரகாரம் வருமானச் செலவினக் கணக்கிற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய 06 நிகழ்ச்சித்திட்டங்களாக இருந்த போதும் சேவை மற்றும் குத்தகை, கழிவுப்பொருள் சேகரிப்பு என மேலதிகமாக 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டில் குறிப்பிடப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் சீர் செய்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுராட்சி மன்ற நிதி ஏற்பாடுகளின் கீழ் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,694,999 பெறுமதியான 19 தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய 172 பொருட்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சீர் செய்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,612,569 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,105,145 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| . | 2020 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 2,081,205 தொகை ஆண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் அறவிட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஆண்டில் ரூபா 1,637,270 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமான சேகரிப்பு முறையாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| ii | நீர் வழங்கல் சேவைக் கட்டணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 82 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 175,446 தொகை அறவிடுவதற்கு இருந்த போதும் சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் போதுமாக இருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதாக அறிய தருகின்றேன். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் | | |
| i | ரூபா 2,490,349 ஆன முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அறவீடுகள் ரூபா 577,188 ஆக இருந்தன | 2020 யூலை முதல் திசெம்பர் வரையான ஆவணங்கள் கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து | 2020 யூலை முதல் திசெம்பர் வரையான ஆவணங்கள் கிடைக்கவில்லையென | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெப்பர் 31 ஆந் திகதி பெறவேண்டிய ரூபா 1,629,316 நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 1,500,000 காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் மயப்படுத்திய சேவையொன்றை வழங்குவதற்காக முன்னரங்கு அலுவலகமொன்றும் பாவனையாளர் சேவை நிலையமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறைவேற்றுவதாக அறிய தருகின்றேன். | முன்னரங்கு அலுவலகமொன்றும் பாவனையாளர் சேவை நிலையமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற்றுக்கொண்ட புத்தகங்களில் மீண்டும் வழங்கப்படாத 406 புத்தகங்கள் காணப்பட்டதுடன் அதன் நிதசார் பெறுமதியை வழங்குவதற்கு உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர். | எதிர்காலத்தில் சீராக்கம் செய்து கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | புத்தகங்களை மீள கொண்டு வருவதற்கோ நிதி நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | அம்பகமுவ பிரதேச சபையினால் நோர்வூட் சபைக்கு கையளிக்கப்பட்ட ஹென்சி உத்தியோகபூரவ விடுதி அமைந்துள்ள இடத்தின் பின்புறமாக கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 02 ஆந் திகதி வரை ஏனைய | சட்டரீதியான உறுதியொன்று இல்லாமையால் அதனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. | அனுமதியற்ற நிர்மாணத்தை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| தரப்பினரால் 04 அடி அளவிலான அனுமதியற்ற மதிலொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. காணியின் 50 சதுர அடி அளவிலான அளவொன்று இந்நிர்மாணத்தின் மூலம் சபை இழந்திருந்தது. | | |
| (இ) அம்பகமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பகுதியொன்று நோர்வூட் பிரதேச சபைக்கு புதிதாக ஸ்தாபிக்கும் போது 23 காணித் துண்டுகள் நோர்வூட் பிரதேச சபைகக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் பரிசோதனை திகதி வரையில் குறித்த காணி பகுதிகளின் உறுதிகள் காணப்படாமை, திட்டங்கள் இல்லாமை, உடன்படிக்கையின் மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன. | வெளியீட்டு உறுதிகள் தயாரிக்கப்பட்டு வருவதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் வருடாந்தம் உருவாகும் 1080 தொன் அளவிலான கழிவுகள் அவதானிக்கப்பட்டதுடன் அக்கழிவுப்பொருட்களிலிருந்து சேதனப் பசளைகள் தயாரித்தல், உயிரியல் வாயு தயாரித்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக பாதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாமல் சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே மஸ்கெலிய பிரதேச சபையின் கழிவுப்பொருள் தொகுதியில் இடல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 5,168,600 இற்கு அண்மித்த தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டும். |